# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII, Cr.P.C.)
## IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 71/2023 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | பானுமதி |
| Husband Name | : | தேவராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 28 |

**A1 present, A2 absent.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05.10.2023.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது செங்கப்பள்ளியில் வசித்து வருகிறேன். நான் ஆடு, மாடு மேய்து வருகிறேன். கடந்த 22.02.2023ம் தேதி காலை 10.30 மணியளவில் செங்கப்பள்ளியில் ஆனந்த பவன் ஓட்டலில் அருகே உள்ள பொய்யேரி காட்டுப்பகுதியில் நான் ஆடு, மாடு மேய்த்து கொண்டிருந்தேன். அப்போது இரண்டு நபர்கள் கருப்பு புளு நிறம் கொண்ட Splendor வாகனத்தில் வந்தார்கள். அந்த வாகனத்தின் ஓட்டுநர் வண்டியில் அமர்ந்து கொண்டு இருந்தார். பின்னால் இருந்தவர் இறங்கி வந்து என்னிடம் முகவரி கேட்பது போல் வந்து என் கழுத்தில் இருந்து 2 1/2 பவுன் தங்க செயினை பறித்தார். நான் என்னுடைய செயினை கையில் பிடித்தபோது பாதி செயினை அவருடைய கைக்கு சென்றுவிட்டது. நான் சத்தம் போட்டேன். அருகில் இருந்தவர்கள் வள்ளியம்மாள், கருப்பம்மாள் ஆகியோர் அங்கு வந்துவிட்டார்கள். உடனே அந்த நபர்கள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். எனது நகையின் ஒரு பகுதியை அவர்கள் எடுத்து சென்றுவிட்டார்கள்.

2. அந்த வாகனத்தை ஓட்டி வந்த நபர் தலைகவசம் அணிந்திருந்தார். பின்னால் அமர்ந்து வந்த நபர் முககவசம் அணிந்திருந்தார். அதனால் அவர்களது முகத்தை பார்க்க இயலவில்லை. அந்த வாகனத்தின் இறுதி பதிவு எண் மட்டும் தெரியும், அது 8121. அந்த வாகனத்தின் பதிவு எண்ணை நான் சம்பவ சமயத்தில் பார்த்தேன். நான் எனது கணவர் தேவராஜுக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். அவர் சொந்த வேலையாக திருச்சி சென்றிருந்ததால் அவர் என்னை வீட்டிலேயே இருக்குபடியும், அவர் வந்த உடன் புகார் கொடுத்து கொள்ளலாம் என்று சொன்னார். 5 நாட்கள் கழித்து எனது கணவர் வந்தவுடன் ஊத்துக்குளி காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகாரை எனது கணவர் எழுதினார். புகாரில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. நாங்கள் புகார் கொடுத்து ஒரு வாரம் கழித்து எனது கணவருக்கு போலீசார் போன் செய்து என்னிடம் நகையை பறித்த நபர்களை பிடித்துவிட்டதாக சொன்னார்கள். பின்னிட்டு நானும், எனது கணவரும் ஊத்துக்குளி காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையத்தில் எனது நகையை அடையாளம் காட்டுமாறு சொன்னார்கள். நானும் அடையாளம் காண்பித்தேன். நான் அந்த நகையை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன்.

4. தற்போது நான் அந்த நகையை நீதிமன்றத்தில் ஆஜர் செய்கிறேன். **(சாட்சி அறுந்த நிலையில் உள்ள தனது நகையை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார். நகை 2 துண்டுகளாக உள்ளது. மேற்படி நகையின் துண்டுகள் நீதிமன்றத்தில் உள்ள புகைப்படத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டு அ.சா.பொ.1 வரிசையாக குறியீடு செய்யப்பட்டு மீண்டும் சாட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அ.சா.பொ.1ன் புகைப்படம் அ.சா.ஆ.2 ஆகவும், அதற்கான இந்திய**

**சாட்சிய சட்ட பிரிவு 65B ன் கீழான சான்று அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. மேற்படி ஆனந்தபவன் உணவகத்திற்கு அருகாமையில் ஒரு பெட்ரோல் பங்கும் அதற்கு அடுத்தாற்போல் ஒரு காடும் உள்ளது என்றால் சரிதான். அந்த காட்டை ஒட்டி கிழபுறத்தில் சுற்று சுவருடன் கூடிய ஒரு சுடுகாடும் உள்ளது என்றால் சரிதான். அதற்கு அடுத்தாற்போல் ஒரு முல்லுகாடு உள்ளது என்றால் சரிதான். அதற்கு பின்னால் தான் நான் ஆடு மேய்த்து கொண்டிருந்த காடு உள்ளது என்றால் சரிதான். அந்த பகுதியில் தார் சாலை என்று பார்த்தால் கிழமேல் புறவழி சாலையின் சர்வீஸ் சாலையும், கன்னிமார் கோவிலுக்கு செல்லும் தென்வடல் சாலையும் உள்ளது என்றால் சரிதான்.

2. நான் ஆடு மேய்த்து கொண்டிருந்த இடத்தில் இருந்து மேற்படி தார் சாலைகள் 500 மீட்டர் தொலைவு இருக்கும் என்றால் சரிதான். அந்த காட்டிற்குள் வண்டிகள் வருவதற்கு வழிகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். சம்பவத்தில் ஈடுபட்டவர்களின் அங்க அடையாளங்களை பற்றி நான் புகாரிலோ போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். காட்டிற்குள் இருந்த பார்த்தால் சாலையில் இருப்பவர்கள் தெரியமாட்டார்கள் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திலிருந்து ஓடி வந்து பார்ப்பதற்குள் அந்த நபர்கள் சென்றுவிட்டார்கள் என்றாலும், அதனால் நான் அவர்களது உருவ அமைப்பை பார்க்க இயலவில்லை என்றால் சரிதான், வாகனத்தின் பதிவு எண்ணை மட்டும் பார்த்தேன். நான் புகாரை காவல் நிலையத்தில் வைத்து எழுதினேன் என்றால் சரிதான்.

3. நான் கொடுத்த புகாரில் என்னுடன் சம்பவ சமயத்தில் என்னுடன் யாரும் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சத்தம் போட்ட பின்பு தான் அருகில் இருந்தவர்கள் வந்ததாக சொல்லியுள்ளேன். போலீசார் என்னை ஒருமுறைதான் விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. 7 நாட்கள் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக புகாரை சம்பவ நடந்து உடனே கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். ஆனால், தாமதம் ஏற்பட்டதற்கான காரணத்தை நான் எனது புகாரிலோ போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான், எனது கணவர் திருச்சிக்கு வேலை விசயமாக சென்றிருந்தால் அவரை கேட்டுவிட்டு புகார் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டது. எனது கணவர் திருப்பூரில் பனியம் கம்பெனி நடத்தி வருகிறார் என்றால் சரிதான். நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடக்காத காரணத்தினால் தான் புகார் கொடுப்பதில் காலதாமதம் ஏற்ப்பட்டது என்றால் சரியல்ல.

2. புகாரை எனது கணவர் எழுதினார். புகாரில் எனது கணவர் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். புகாரை போலீசார்தான் தயார் செய்தனர் என்றால் சரியல்ல. அ.சா.பொ.1 நகை எங்கு வாங்கியது என்று காட்டுவதற்கு ரசீது ஏதேனும் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. புகாரில் நகையின் வடிவம் பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் போலீசாரிடம் எனது கையில் இருக்கும் மீத நகையை காண்பித்தேன். நான் அ.சா.பொ.1 நகையை அணிந்துள்ளவாறு ஏதேனும் புகைப்படம் உள்ளதா என்றால் தற்போது என் கையில் உள்ளது. **(சாட்சி தனது பர்சில் இருந்து தான் நகையை அணிந்துள்ளவாறு இருக்கும் Passport Size புகைப்படத்தை காண்பித்தார்).** நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த பொருளும் திருட்டு போகவில்லை என்றால் சரியல்ல.

**(2ம் எதிரி தரப்பால் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை முதல் எதிரியால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது)**

**<u>நீதிமன்ற கேள்வி :</u>** உமது குறுக்கு விசாரணையில் சம்பவ இடத்திற்கும் இரு சக்கர வாகனம் நின்றிருந்த இடத்திற்கும் 500 மீட்டர் இடைவெளி இருக்கும் என்று கூறியுள்ளீர். தற்போது நீர் நீதிமன்றத்தில் நின்றிருக்கும் இடம் சம்பவ

இடம் என்று கருதி கொண்டால் இருசக்கர வாகனம் எங்கு நின்று கொண்டிருந்தது?

**<u>பதில்</u>** : ஊத்துக்குளி ஆர். எஸ் பேருந்து நிறுத்தம் தாண்டி சற்று தூரம் இருக்கும்.

**<u>நீதிமன்ற கேள்வி :</u>** அரை கிலோ மீட்டர் தூரம் இருக்குமா?

**<u>பதில்</u>** : அரை கிலோ மீட்டர் தூரம் இருக்காது. அதிலும் பாதிதான் இருக்கும்.

**<u>நீதிமன்ற கேள்வி :</u>** நீங்கள் அந்த நபரை துரத்தி கொண்டு எவ்வளவு தூரம் ஓடினீர்கள்?

**<u>பதில்</u>** : நான் சாலையின் அருகிலேயே சென்றுவிட்டேன். நான் அவர்களது அருகே சென்ற போது அவர்கள் சரியாக வண்டியை எடுத்து சென்றுவிட்டார்கள்.

**<u>நீதிமன்ற கேள்வி :</u>** அவர்கள் வண்டியை எடுக்கும்போது உங்களுக்கும் அந்த வண்டிக்கும் எவ்வளவு தொலைவு இருக்கும்?

**<u>பதில்</u>** : தற்போது நான் நிற்கும் இடத்தில் இருந்து இந்த அறையின் கதவு வரையிலான தூரம் தான் இருக்கும். **(சாட்சி கூண்டில் இருந்து நீதிமன்ற அறையின் கதவு வரையிலான இடைப்பட்ட தூரத்தை காட்டுகிறார்).**

**<u>நீதிமன்ற கேள்விகள் சம்மந்தமாக அனுமதியின் பேரில் 2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் மேற்கு இருந்து கிழக்கு நோக்கி ஓடிவந்தேன் என்றால் சரிதான். இருசக்கர வாகனமும் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிதான் சென்றது என்றால் சரிதான். அதன் காரணமாக நான் வானத்தின் முன் பகுதியை பார்க்க இயலவில்லை என்றால் பின் பகுதியை மட்டும் தான் பார்க்க முடிந்தது.

**<u>நீதிமன்ற கேள்விகள் சம்மந்தமாக அனுமதியின் பேரில் 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டு வாகனத்தின் கடைசி நான்கு எண்கள் அனைத்து மாவட்டங்களிலும் வாகனங்களுக்கு பொதுவாக கொடுக்கப்படும் என்றால் சரிதான். எனக்கு அதுமட்டும் தான் தெரிந்தது. நான்

**சொன்ன வாகனத்திற்கும் நீதிமன்றத்தில் பறிமுதல் செய்யப்பட்ட வாகனத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.**

**<u>நீதிமன்ற கேள்வி :</u> நீங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது வாகனத்தின் முன் பதிவு எண்ணை கூறினேனா என்றால்?**

**<u>பதில்</u>** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 71/2023 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | வள்ளியம்மாள் |
| Husband Name | : | சுப்பிரமணி |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 57 |

**A1 present, A2 absent.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05.10.2023.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது செங்கப்பள்ளியில் உள்ள ஜோதி நகரில் வசித்து வருகிறேன். நான் ஆடு, மாடு மேய்து வருகிறேன். அ.சா.1 பானுமதியை எனக்கு தெரியும். அவர் எனது வீட்டு அருகே தான் குடியிருக்கிறார். நானும் பானுமதியும் ஆனந்தபவன் ஓட்டல் அருகே உள்ள கிழபுறம் உள்ள காட்டில் ஆடு மேய்த்து வருவோம். கடந்த 22.02.2023ம் தேதி காலை 10.30 மணியளவில் நானும், பானுமதி மற்றும் கருப்பம்மாள் ஆகியோர் பக்கம் பக்கமாக ஆடு மேய்த்து கொண்டிருந்தோம். எங்களுக்கு இடையே 20 அடி தொலைவில், கூப்பிடும் தொலைவில் இருந்தோம். பானுமதி அய்யோ, அய்யோ என்று சத்தம்போட்டார். திருடன் திருடன் என் செயினை பிடுங்குகிறார் என்று சத்தம் போட்டார். நாங்கள் ஓடிவந்தோம். அந்த நபரை பானுமதி துரத்தி சென்றார். அந்த நபர் ஓடி சென்று சுமார் 30 அடிக்கும் மேலாக தள்ளி நின்றிருந்த இருசக்கர வாகனத்தில் இருந்த ஓட்டுநருடன் சென்றுவிட்டார்.

2. பானுமதியின் கழுத்தில் இருந்த 2 1/2 பவுன் செயின் ஆகும். அந்த நபர் செயினை பறித்தபோது பானுமதியின் கையிலும் மீதி அந்த நபரின் கையிலும்

சிக்கிகொண்டதாக பானுமதி சொன்னார். பானுமதி கொடுத்த புகாரின் பேரில் போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவ பகுதிக்கு முன்பு சுற்றுசுவருடன் கூடிய ஒரு சுடுகாடு உள்ளது என்றால் சரிதான், நான் அதன் பின்பு தான் ஆடு மேய்த்து கொண்டிருந்தேன். நான் நின்றிருந்த இடத்திலிருந்து பார்த்தால் சாலையில் யார் உள்ளனர் என்று தெரியாது என்றால் சரிதான், நான் நின்றிருந்த பகுதி ஏரி குழியாகும். நான் சென்று பார்ப்பதற்குள் அந்த வாகனம் போய்விட்டது என்றால் சரிதான். அதன் காரணமாக நான் அந்த நபர்களை பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் அந்த வாகனத்தி நேரடியாக பார்க்காததால் அந்த வாகனத்தை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(2ம் எதிரி தரப்பால் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை முதல் எதிரியால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 71/2023 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | கருப்பம்மாள் |
| Husband Name | : | ஆறுமுகம் |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 65 |

**A1 present, A2 absent.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05.10.2023.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது செங்கப்பள்ளியில் உள்ள ஜோதி நகரில் வசித்து வருகிறேன். நான் ஆடு மேய்த்து வருகிறேன். அ.சா.1 பானுமதியை எனக்கு தெரியும். அவர் எனது வீட்டு அருகே தான் குடியிருக்கிறார். நானும் பானுமதியும் ஆனந்தபவன் ஓட்டல் அருகே உள்ள கிழபுறம் உள்ள காட்டில் ஆடு மேய்த்து வருவோம். கடந்த 22.02.2023ம் தேதி காலை 10.30 மணியளவில் நானும், வள்ளியம்மாளும் ஆகியோர் ஆனந்தபவன் ஓட்டல் அருகே உள்ள பெட்ரோல் பங்க் அருகே பக்கம் பக்கமாக ஆடு, மாடு மேய்த்து கொண்டிருந்தோம்.

2. பானுமதி அவருடைய காட்டில் ஆடு மாடு மேய்த்து கொண்டிருந்தார். எங்களுக்கு இடையே 30 அடி தொலைவில், கூப்பிடும் தொலைவில் இருந்தோம். பானுமதி அய்யோ, அய்யோ என்று சத்தம்போட்டார். திருடன் திருடன் என் செயினை பிடுங்குகிறார் என்று சத்தம் போட்டார். நாங்கள் ஓடிவந்தோம். அந்த நபரை பானுமதி துரத்தி சென்றார். அந்த நபர் ஓடி சென்று சுமார் 30 அடிக்கும் மேலாக தள்ளி நின்றிருந்த இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்.

3. பானுமதியின் பின்னால் ஓடி சென்று கேட்டபோது தான் கழுத்தில் இருந்த 2 1/2 பவுன் செயின் ஆகும். அந்த நபர் செயினை பறித்தபோது பானுமதியின் கையிலும் மீதி அந்த நபரின் கையிலும் சிக்கிகொண்டதாக பானுமதி சொன்னார். பானுமதியின் கையில் இருந்த பாதி செயினை பார்த்தேன். பானுமதி கொடுத்த புகாரின் பேரில் போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவ பகுதிக்கு முன்பு சுற்றுசுவருடன் கூடிய ஒரு சுடுகாடு உள்ளது என்றால் சரிதான். நான் அதன் அருகே உள்ள ஏரியின் மீது தான் ஆடு மேய்த்து கொண்டிருந்தேன். நான் நின்றிருந்த இடத்திலிருந்து பார்த்தால் சாலையில் யார் உள்ளனர் என்று தெரியாது என்றால் ஓரளவுக்கு தெரியும். நான் நின்றிருந்த பகுதி ஏரி குழி பகுதி என்றால் சரிதான். நான் சென்று பார்ப்பதற்குள் அந்த வாகனம் போய்விட்டது என்றால் சரிதான். அதன் காரணமாக நான் அந்த நபர்களை பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் அந்த வாகனத்தி நேரடியாக பார்க்காததால் அந்த வாகனத்தை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(2ம் எதிரி தரப்பால் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை முதல் எதிரியால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 71/2023 |
| Deposition of Witness | : | PW– 4 |
| Name | : | கார்த்தி |
| Father Name | : | ராசு |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 33 |

**A1 present, A2 absent.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05.10.2023.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது செங்கப்பள்ளியில் உள்ள வடக்கு சானப்பானையத்தில் வசித்து வருகிறேன். நான் கம்பெனி வைத்துள்ளேன். கடந்த 28.02.2023 ம் தேதி காலை 10.00 மணிக்கு நானும் என்னுடைய அண்ணன் சக்திவேலும் ஆனந்தபவன் ஓட்டலுக்கு சாப்பிடவதற்கு சென்றோம். அப்போது போலீசார் ஆனந்தபவன் ஓட்டல் அருகில் உள்ள காட்டிற்கு வந்து விசாரணை செய்துகொண்டிருந்தார்கள். சம்பவத்தை பற்றி விசாரித்து போலீசார் அங்கு வரைபடம் வரைந்து விபரம் எழுதிகொண்டிருந்தார்கள். அதில் நாங்கள் இருவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(பார்வை மகஜரில் உள்ள சங்கதிகள் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அதிலுள்ள விவரங்கள் சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. பார்வை மகஜரில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் கையொப்பம் செய்த பார்வை மகசரை படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். என்னுடன் கையொப்பம் செய்த சக்திவேல் அ.சா.1ன் கணவரான தேவராஜின் சகோதாரர் என்றால் சரிதான். போலீசார் என்னிடம் பெயர் முதலிய விபரங்களை எழுதி பெற்றுக்கொண்டனர் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு காவல் நிலையம் வரசொல்லி கையொப்பம் பெற்றனர் என்றால் சரியல்ல.

2. சம்பவ இடத்தில் சுடுகாடு உள்ளது என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகசரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(2ம் எதிரி தரப்பால் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை முதல் எதிரியால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.